## இந்திய பொருளாதாரம்

## பகுதி - 6

## நாட்டு வருமானம்

**1. மக்களை எந்த வருமானத்தின் அடிப்படையில் வகைப்படுத்துகிறோம்?**

மக்களை செல்வந்தர், நடுத்தர வர்க்கத்தினர், ஏழைகள் என தனிநபர் வருமனத்தின் அடிப்படையில் வகைப்படுத்துகிறோம்.

**2. நாட்டு வருமனத்தின் அடிப்படையில் நாடுகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?**

நாட்டு வருமனத்தின் அடிப்படையில் நாடுகளை வளர்ந்த நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள் என இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

**3. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை குறிக்கும் குறியீடுகளில் ஒன்றாக அமைவது எது?**

ஒரு நாட்டின் வருமானம்.

**4. ஒரு நாட்டு வருமானம் என்றால் என்ன?**

நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓரண்டு காலத்தில் உற்பத்தி செயப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பின் அளவே ஆகும். நாட்டு வருமானம் மொத்தநாட்டு உற்பத்தி என்றும் அழைக்கப்படுகிறது.

**5. மொத்த நாட்டு உற்பத்தி – Gross National Product.** எனவே நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டின் மொத்த வருமானத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

**6. மொத்தநாட்டு உற்பத்தி (Gross Domestic Product) என்றால் என்ன?**

ஒரு நாட்டில் ஓரண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பும், அந்நாட்டு மக்கள் ஓரண்டில் ஈட்டிய வருமானமும், வெளிநாட்டு முதலீட்டின் மூலம் கிடைக்கும் இலாபமும் சேர்ந்ததே மொத்த நாட்டு உற்பத்தியாகும்.

**7. ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் ஓர் ஆண்டில் அந்நாட்டிற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பைக் குறிப்பது எது?**

மொத்த உள்நாட்டு உற்பத்தி

**8. நிகர நாட்டு உற்பத்தி என்றால் என்ன?**

(NDP- Net Domestic Product) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து தேய்மானச் செலவை கழித்தால் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

**9. நிகர நாட்டு உற்பத்தி எதற்கு சமம்?**

நிகர நாட்டு உற்பத்தி= மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேய்மானச் செலவு.

**10. மக்களின் வாழ்க்கைத்தரத்தை அளக்கப்பயன்படும் கருவி எது?**

தலா வருமானம்

**11. தலா வருமானம் உயர்ந்தால் மக்களின் வாழ்க்கைத்தரம் எவ்வாறாகக் கருதப்படும்?**

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததாகக் கருதப்படும்.

**12. தலா வருமானம் என்றால் என்ன?**

நாட்டு வருமானத்தை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்கக் கிடைக்கும் ஈவு தலா வருமானம் என்றழைக்கப்படுகிறது.

**13. தலா வருமானம் எதற்கு சமம்?**

தலா வருமானம்= மொத்த உள்நாட்டு உற்பத்தி / நாட்டின் மக்கள் தொகை

**14. உலக வங்கி அறிக்கையின்படி இந்தியாவின் தலாவருமானம் அமெரிக்க டாலர் எவ்வளவு?**

950 அமெரிக்க டாலர்

**15.**

| நாடுகள் | தலா வருமானம் (அமெரிக்க டாலர்) |
|---|---|
| ஜப்பானின் | 47490 |

| | |
|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 46040 |
| இங்கிலாந்து | 42840 |

**16. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள் யாவை?**

உற்பத்தி முறை, வருமான முறை, செலவின முறை

**17. நாட்டு வருமானத்தை குறைத்து மதிப்பிட வழிவகை செய்யும்** முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்று - கருப்புப் பணம்

**18. கருப்புப் பணம் என்றால் என்ன?**

கணக்கில் காட்டப்படாத பணமாகும். சட்டத்திற்குப் புறம்பானவழிகளில் ஈட்டப்பட்ட வருவாய் ஆகும். மேலும் கருப்புப் பணமானது ஒட்டு மொத்த சமுதாயத்தை பாதிப்பதுடன் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கிறது.

**19. கிராமப் பகுதிகளில் பண்டமாற்று முறையில் நடைபெறும் பொருளாதாரம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

பணம்சாரா பொருளாதாரம்

**20. பணம்சாரா பொருளாதாரம் நாட்டு வருமானக்கணக்கீட்டை எவ்வாறு மதிப்பிடுகிறது?**

உண்மை அளவைவிட குறைத்து மதிப்பிடுகிறது.

**21. எவற்றை நாட்டு வருமானம் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை?**

வீட்டு வேலைகள், வீட்டைப் பராமரித்தல், சமூகப் பணிகள் போன்றவற்றை நாட்டு வருமானம் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. நம் நாட்டுப் பெண்கள் வீட்டில் மேற்கொள்ளும் மதிப்பு மிக்க பணிகள் நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

**22. முதன்மைத் துறை என்பது எவற்றை குறிக்கும்?**

வேளாண்மை, வனத்துறை, மீன் பிடித்தல் மற்றும் சுரங்கங்கள் போன்றவற்றைக் குறிக்கும்.

**23. இரண்டாம் துறை என்பது எவற்றை குறிக்கும்?**

உற்பத்தி, மின்சாரம்

**24. பணிகள் துறை என்பது எவற்றை குறிக்கும்?**

செய்தி, தொலைதொடர்பு, போக்குவரத்து, வணிகம், வங்கிக்ள், காப்பீட்டு நிருவனங்கள் மற்றும் கட்டுமானத் துறையைக் குறிக்கும்.

**25. இந்திய நாட்டுவருமானத்தில் துறைகளின் பங்களிப்பு**

| | |
|---|---|
| முதன்மைத் துறை | 15.8% |
| இரண்டாம் துறை | 25.8% |
| பணிகள் துறை | 58.4% |

**26. தலையிடாக் கொள்கை (Laissez- faire) என்றால் என்ன?**

அரசு பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஆகும்.

**27. அரசின் பணிகள் யாவை?**

1. பாதுகாப்புப் பணிகள்
2. நிர்வாகப் பணிகள்
3. சமூகப்பாதுகாப்புப் பணிகள்
4. பொருளாதாரப்பணிகள்

## பகுதி – 7

## (பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியப் பொருளாதாரத்தின் நிலை )

**1. இந்தியப் பொருளாதாரம் எதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது?**

கிராமப் பொருளாதாரம்

**2. எத்தனை விழுக்காடு மக்கள் வேளாண்மையை நம்பி வாழ்ந்தார்கள்?**

70%

**3. இந்தியாவில் வணிகம் மற்றும் தொழில் துறையானது எவற்றை மையமாகக் கொண்டு செயல்பட்டன?**

நகரங்களை மையமாகக் கொண்டு செயல்பட்டன.

**4. இந்திய விடுதலைக்குப்பின் இந்தியாவின் முக்கியத் தொழிலாக எந்தத் தொழில் காணப்பட்டது?**

**ஜவுளித்தொழில்**

**5. இந்தியா தலைசிறந்து விளங்கிய உற்பத்தி எது?**

**கைவினைப்பொருள்கள் உற்பத்தி**

**(விடுதலைக்குப் பின் இந்தியப் பொருளாதாரம்)**

**6. பிரதமர் ஜவஹர்லால் நேரு வேளாண்மை, நீர்பாசனம் மற்றும் மின் உற்பத்தி திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தார்.**

**7. கலப்புப் பொருளாதாரம் என்றால் என்ன?**

**தனியார் துறையும் பொதுத் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுவது கலப்புப் பொருளாதாரம் எனப்படுகிறது.**

**8. விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய பொதுத் துறையையும் தனியார் துறையையும் இணைத்து செயல்படும் கலப்புப் பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்த நேரு தீர்மானித்தார்.**

**9. விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டங்களே சிறந்தது என்று பரிந்துரைத்தவர்?**

**ஜவஹர்லால் நேரு**

**10. ஐந்தாண்டுத் திட்டங்கள் எந்த நாட்டில் இருந்து பெறப்பட்ட கருத்தமைவாகும்?**

**சோவியத் நாட்டில்**

**11. இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற இந்தியத் திட்டக்குழு எந்த ஆண்டு அமைக்கப்பட்டது?**

**1950**

**12. திட்டக்குழுவின் தலைவராக யார் செயல்பட்டது?**

**இந்திய பிரதமர்**

**13. ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் யாவை?**

1. நாட்டு வருமானத்தை அதிகரித்தல்

2. வருமான மற்றும் செல்வப்பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்

3. வறுமையை ஒழித்தல்

4. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

5. வேளாண்மை உற்பத்தி மற்றும் தொழில் உற்பத்தியில் உள்ள இடர்பாடுகளை நீக்குதல்

**14. ஐந்தாண்டுத் திட்டங்களை செயல்படுத்த மாநில அரசுகளின் ஒத்துழைப்பைப் பெற வேண்டி அமைக்கப்பட்ட குழு –** தேசிய வளர்ச்சிக்குழு ( National Development Council )

**15. தேசிய வளர்ச்சிக்குழுவின் உறுப்பினராகச் செயல்படுபவர் யார்?**

மாநில முதலமைச்சர்கள்

**16. இந்தியாவில் இதுவரை எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவுற்றது?**

11 வது ஐந்தாண்டுத் திட்டங்கள்

**17. 11 வது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் என்ன?**

2007-2012

**18. 11 வது ஐந்தாண்டுத் திட்டம் எந்த மாதத்தில் தொடங்கப்பட்டது?**

ஏப்ரல் 2007

**19. 11 வது திட்டத்தின் நோக்கங்கள் யாவை?**

1. நீர்பாசன வசதிகள், கிராமங்கள் மின்மயமாதல் மற்றும் கிராமச் சாலைகளை மேம்படுத்த அரசு முதலீட்டை அதிகரித்தல்

2. மின்சாரம் மற்றும் உரங்களுக்கான மானியத்தைக் குறைத்தல்

3. வேளாண் ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துதல்

4. சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதி செய்தல்

5. வேலை வாய்ப்புகளை விரிவாக்குதல்

6. கிராமப்புற கட்டமைப்பு வசதிகளை பெருக்குதல்

7. வறுமையை ஒழித்தல்

8. தொடக்கக் கல்வியில் இடை நிற்றலை குறைத்தல்

20. நம் நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்வது எது?

வேளாண்மை

21. நமது நாட்டில் எத்தனை விழுக்காடு வேளாண்மையில் இருந்து பெறப்படுகிறது?

40%

22. இந்தியாவில் பசுமைப்புரட்சி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

1967

23. பசுமைப்புரட்சியை அறிமுகப்படுத்தியநிறுவனம் எது?

இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்

24. பசுமைப்புரட்சி என்றால் என்ன?

கோதுமை மற்றும் அரிசி போன்ற வேளாண் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க மிகுந்த விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகளை பயன்படுத்துவதாகும்.

25. எதன் விளைவாக இந்தியா போன்ற மாநிலங்களில் உணவு உற்பத்தி அதிகரித்தது?

பசுமைப்புரட்சி விளைவாக

26. இந்தியா எந்த உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது?

உணவு உற்பத்தியில்

27. அரசால் நடத்தப்பெறும் பொதுத்துறை நிறுவனங்கள் யாவை?

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், பாரத் மிகுமின் நிறுவனம், பாரத் சஞ்சார் நிகாம் நிறுவனம், ஏர்-இந்தியா

28. இந்தியப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு எது?

1991 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்க்ளை அடைய பல்வேறு பொருளாதார நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**29. பொருளாதார சீர்திருத்தின் அம்சங்கள் யாவை?**

1. தாராள மயமாதல்

2. தனியார் மயமாதல்

3. உலக மயமாதல்

**30. குடிசைத் தொழிலுக்கு எ.கா –** கைத்தறி மற்றும் கயிறு திரித்தல்

**31. ஒரு நாட்டின் அங்காடியை பன்னாட்டு அங்காடியுடன் தொடர்புபடுத்துவது எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

உலக மயமாதல்

**32. தற்போது இந்தியாவில் எத்தனை அணுமின் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன?**

17

**33. நிலவில் நீர் இருந்த்தைக் கண்டறிந்த விண்கலம் எது?**

சந்திராயன் –I 2008 ம் ஆண்டு கண்டறிந்தது.

**34. இந்தியாவின் சார்பில் விண்ணில் ஏவப்பட்ட முதல் செயற்கைக் கோள் எது?**

ஆரியபட்டா 1975 ம் ஆண்டு செலுத்தப்பட்டது.

**35. தொலைதொடர்பு வசதிகளை அளிப்பதில் இந்தியா உலக நாடுகளிடையே எத்தனையாவது இடத்தில் உள்ளது?**

10 வது இடம்

**36. இந்தியாவின் முன்னனி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் யாவை?**

இன்போசிஸ், விப்ரோ, எச்.சி.எல், காக்கனிசான்ட்

**37.2001 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு?**

**64.8 %**

**38. ஆண்களில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு?**

**75.25%**

**39. பெண்களில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு?**

**53.67%**

**40. இந்தியாவில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு?**

**560.68 மில்லியன்கள்**

**41. கல்வியறிவு பெற்றவர்கள் அதிகமாக உள்ள மாநிலம் எது?**

**கேரளா (90%)**

**42. கல்வியறிவு பெற்றவர்கள் குறைவாக உள்ள மாநிலம் எது?**

**பீகார் (47%)**

**43. தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் விழுக்காடு – 73.5%**

**44. 14 வயதிற்குட்பட்டோருக்கு இலவச கட்டாயக்கல்வி அளிக்கப்பட்டு வரும் திட்டம் எது?**

**14 வயதிற்குட்பட்டோருக்கு இலவச கட்டாயக்கல்வி (Right of Children to Free and Compulsary Education Act of 2009) 2009 ம் ஆண்டு சட்டம்**

**45. அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின் பெயர் – Sarva Siksha Abyan**

**46. இடைநிலைக்கல்வி மேம்பாட்டிற்காக அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. Rastriya Madhyamic Siksha Abyan**

**47. உயர்கல்வி வழங்குவதில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?**

**சீனா மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு பிறகு 3 வது இடத்தில் உள்ளது.**

**48. உயர்கல்வி வழங்குவதில் முக்கிய பங்காற்றும் குழு – பல்கலைக்கழக மானியக்குழு**

**49. சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் தமிழ்நாடு இந்தியாவில் எத்தனையாவது இடத்தில் உள்ளது?**

**3 வது இடம்**

**50. தமிழ்நாட்டில் தொடக்கக்கல்வி முன்னேற்றத்திற்கு முக்கியக் காரணமானவர் யார்?**

**முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.கு. காமராசர்**

**51. உயர்கல்வி வழங்குவதில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னனி மாநிலமாக விளங்குகிறது.**

**52. தமிழ்நாடு அரசு 2020 ம் ஆண்டில் உயர்கல்வி வழங்கும் உயர்கல்வி சேர்க்கை விகிதத்தை எத்தனை விழுக்காடாக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது?**

**25%**

**53. தமிழக மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவது எது?**

**வேளாண்மை**

**54. தமிழ்நாட்டில் அனல்மின் நிலையங்கள் அமைந்துள்ள இடம்**

**எண்ணூர், தூத்துக்குடி, நெய்வேலி, மேட்டூர்**

**55. தமிழ்நாட்டில் நீர்மின் நிலையங்கள் அமைந்துள்ள இடம்?**

**மேட்டூர், குந்தா, பெரியார் அணை, கோதையாறு அணை, பைக்காரா, சிங்காரா, மாயார்**

**56. அணுமின்சக்தி உற்பத்தி அமைந்துள்ள இடம் – கல்பாக்கம் மற்றும் கூடங்குளம்**

**57. தமிழ்நாட்டில் உயிரி பொருட்கள் எரிசக்தி மூலம் எங்கு மின் உற்பத்தி செய்யப்படுகிறது?**

**தருமபுரி மற்றும் நாமக்கல்**